தென்மொழி

அன்றுபோல் இல்லை...!

ஓடி ஒளிந்துன் ஒளிமூழ்கி ஒண்டமிழிற்
பாடிக் கதைசொல்லிப் பாங்கியரோ—டாடினமே,
அன்றுபோ லில்லை அணிநிலவே ; நீளிரவில்
நின்றிறைக் கின்றாய் நெருப்பு.

வண்ணச்சிற் றுடையொடு வாயிற் குதித்திறங்கி
மண்ணிற்சிற் றில்ல மருங்கமர்ந்தே—உண்ணுவமே
அன்றுபோ லில்லை அணிநிலவே ; மூண்டெரிதீக்
குன்றுபோ லானாயோ கூறு.

தேங்கிக் கிடக்கும் இரவின் குளிரொளியில்
தூங்கிக் கிடந்தோமே தண்ணிலவே—ஆங்கதுபோல்
இன்றில்லை ; எனை எரிக்கொழுந்தாய் வாட்டுகின்றாய்
நன்றிதுவோ என்செய்தேன் நான்.

எம்மின் இளையார் இனியகுரல் தாமிசைக்கக்
கும்மி யடித்துவந்த கோதையினுக் கன்று
விருப்பாகி நின்றாயே வெண்ணிலவே ! இன்றேன்
நெருப்பாகி நிற்கின்றாய் நீ !

முத்தை இறைத்த முழுநீலக் கம்பளத்தில்
தத்தி நடைபயிலும் தண்ணிலவே ! பாலொளியைப்
பாய்ச்சுகின்றா யில்லை பருநெருப்பை வாடையிலே
காய்ச்சுகின்றாய் இன்று கனன்று !

சுவடி 13
ஓலை : 4.

விலை
உரு: 1

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

ஆரியர் விழுது!

['விடுதலை'யில் வெளிவந்தது]

நாடென்பார்; மொழியென்பார்; தமிழர்க் கெல்லாம்
நலிவென்பார்; இழிவென்பார்; பிறநாட் டாரால்
கேடென்பார்; மக்களெலாம் திரள்க வென்பார்;
கிளர்ந்தெழுமோர் வல்லுணர்வை எழுதிக் காட்டும்
ஏடென்பார்; எழுத்தென்பார்; இலக்கி யத்தின்
ஏற்றமெலாம் பல்வாறாய் எடுத்துக் காட்டிப்
பாடென்பார்; ஆனாலும் தமிழர்க் குற்ற
பழிபோக்க வழிகாட்டார்! பதுங்கு வாரே!

மூச்சென்பார்; தமிழ்மொழியை! ஆள வந்தார்
முதுகெலும்பை முறித்திடுமோர் உயர்ந்த மேடைப்
பேச்சென்பார்! உரைநடையும் பாட்டுஞ் சேர்ந்த
பேருயர்ந்த நாடகத்தை நடித்து விட்டால்,
ஆச்சென்பார்! ஆயிரம்பேர் பட்டம் பெற்ற
அணியென்பார்; முன்னேற்ற நடைகாட்டுங்கை
வீச்சென்பார்! ஆனாலும் ஆரியத்தை
வீழ்த்துதற்கு வழிகாட்டார்! வீழ்கின்றாரே!

'எழும்பரிதிக் கதிரேயாம்' என்பார்; போர்த்த
இருள்நீக்க எழுந்ததிந்தக் கூட்டம் என்பார்!
தழும்பெல்லாம் போராட்டத் தழும்பே என்பார்.
தனித்துயர்ந்த திரவிடக்கூட் டாட்சி என்றே
பழம்புகழ்ச்சி பேசிடுவார்; ஆனால் நாட்டுப்
பாழ்நிலைதீர் வழிகாட்டார்; காட்டுவோர்க்கும்
விழுப்பகைமை காட்டுகின்றார்; ஆரி யர்க்கே
விழுதாக நிற்கின்றார்! விட ணேரே!

தாகும் இது பின்னர் விளக்கப்படும். ஆரியச் சூத்திரரும் தமிழ வேளாளரும் தம்முள் நேர்மாறுனவர் என்பதை மட்டும் நிலைவில் இருத்த வேண்டும்

தமிழருக்கும சூத்திரர் என்னும் பேருக்கும் எள்ளளவும் இயை பில்லை ஆயினும், ஆரியம் தமிழ் நாட்டில் வேரூன்றிய பின், தமிழர் இங்ஙனம தாழத்திக கூறப்பட்டனர்.

(2) வாழ்க்கை நிலை (ஆச்சிரமம்): ஆரிய வாழ்க்கை பிரமசரியம், கிருகசுதம், வானபபிரசுதம. சநநியாசம என நானகு நிலைகளாக வகுக்கபபடும்; இவறறுள கிருகசுதம் ஒன்றே சூத்திர னுக்குரியது; தமிழர் வாழ்க்கை இல்லறம துறவறம் என இரண டாகவே வகுககபபடும்; இவை எலலாக் குலத்தார்க்கும் பொது.

(3) நூல்: ஆரிய நூற்கலைகள் நால் வேதம் (ருக்கு, யசூர், சாமம, அதர்வணம) ஆறங்கம் (சிசை, கற்பம், வியா கரணம், நிருக்தம். சந்தம், கற்பம்), ஆறு சாத்திரம் (மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம் சாங்கியம், யோகம், வேதாந்தம்), அல்லது தரிசனம், மச்சம், கூர்மம் முதவிய பதினெண் புராணம் மனு சுமிருதி. யாசுஞவல்ய சுமிருதி முதலிய பதினெண் சுமிருதிகள் (தரும நூல்கள்), பவுட்கரம. மிருகேந்திரம் முதலிய இருபத்தெட் டாகமங்கள், நாட்டியம், இசைக் கருவிப் பயிற்சி முதலிய அறு பத்து நான்கு கலைகள் எனவும்; அசுடாதச (பதினெட்டு) வித்தை (நால் வேதமும் ஆறங்கமும், புராணம், நியாய நூல், மீமாஞ்சை, சுமிருதி என்னும் நூல் உபாங்கமும், ஆயுள்வேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம் அருத்த நூல் எனனும் நான்குப) எனவும்; பிறவாறும் வகுத்துக் கூறப்படும்.

தமிழ் நூல்சள் இயல், இசை, நாடகம் எனவும்; அகப்பொருள் நூல்கள், புறபபொருள் நூலகள் எனவும்; பாட்டு, உரை, நூல், வாய்மொழி (மந்திரம்), பிசி, அங்கதம, முதுசொல் என்னும் எழு வகை நிலமாகவும் வகுக்கப்படும். கடைக்கழக (சங்க) நூல்கள பதினெண்கீழ்க் கணக்கு, பதினெண்மேற் கணக்கு (பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்) எனவும்; கழக (சங்க) நூல்கள், கழக மருவிய நூல்கள் எனவும் வகுக்கப்படும்

தொடர்நிலைச் செய்யுட்கள் (காவியங்கள்) தொல்காப்பியர் காலத்தில் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இயைபு என்னும் எட்டு வனப்பாக வகுக்கப்பட்டன; இக் காலத்தில் பெருந் தொடர்நிலை, சிறு தொடர்நிலை எனவும்; சொற் றொடர் நிலை, பொருட்டொடர் நிலை எனவும் வகுக்கப்பட்டுத் தொண்ணூற்றாறு பனுவல் (பிரபந்தம்) களாக விரிக்கப்படும். கடைக்கழகக் காலத்தையடுத் தியற்றப்பட்ட பத்துத் தொடர்நிலைச்

செய்யுட்களை ஐஞ்சிற்றிலக்கியம், ஐம்பேரிலக்கியம் என இரு திறமாகப் பகுப்பர்.

இதிகாசம், புராணம் என்னும் நூல் வகைகள், பெயரளவில் வடமொழியேனும், பொருளளவில் இரு மொழிக்கும் பொதுவாகும்.

(4) **நயன்மை :** ஆரிய முறை நடுவுநிலை திறம்பிக் குலத்துக்கொரு வகையாக முறை கூறும்.

உ-ம். "பிராமணனும் சத்திரியனும் ஒருவரையொருவர் திட்டிக்கொண்டால், பிராமணனுக்கு 250 பணமும், சத்திரியனுக்கு 500 பணமும் அறமறிந்த அரசன் தண்டம் விதிக்க." (மனு, 8:276).

"பிராமணன் சத்திரியனை அன்முறையாய் (அநியாயமாய்)த் திட்டினால் 50 பணத்தையும், அங்ஙனம் வைசியனைத் திட்டினால் 25 பணத்தையும், சூத்திரனைத் திட்டினால் 12 பணத்தையும் தண்டமாக விதிக்க." (மனு, 8 : 268).

"இரு பிறப்பாளரின் (மேல் மூவரணத்தாரின்) பெயரையும் குலத்தையும் சொல்லி, இகழ்ச்சியாகத் திட்டுகிற சூத்திரன் வாயில், பத்தங்குல நீளமுள்ள எஃகுக் கம்பியைக் காய்ச்சி எரிய எரிய வைக்க." (மனு, 8 : 271).

"பிராமணனுக்குத் தலையை மொட்டையடிப்பதே கொலைத் தண்டமாகும்; மற்ற வரணத்தாருக்கே கொலைத் தண்டமுண்டு. பிராமணன் என்ன தீவினை செய்தாலும், அவனைக் கொல்லாமல் காயமின்றி, அவன் பொருளுடன் ஊரை விட்டுத் துரத்திவிட வேண்டும்." (மனு, 8:379, 80).

இத்தகைய முறையே, ஆரிய அற நூல்களில் தலைமையானதாகச் சொல்லப்படும் மனுதரும சாத்திரத்தில் மலிந்து கிடக்கின்றது. அதில் பிராமணனுக்குக் கூறப்படும் உயர்வும், பொருள் வருந்தும, சூத்திரனுக்குக் கூறப்படும் இழிவும் ஆக்கத் தடையும் மிகமிக வரையிறந்தன. அறிவுடையோர் அதனை அற நூல் என்றும், தரும சாத்திரமென்றும் கூற நாணுவர். அப்பெயர்களை மங்கல வழக்காக, அல்லது எதிர்மறையிலக்கணையாகக் கொண்டாலன்றி, அந்நூலுக்கு எள்ளளவும் பொருந்தா.

தமிழ் அற நூல்களான நாலடியாரும், திருக்குறளுமோ, ஆங்கில முறைமைபோல, எல்லாக் குலத்தார்க்கும் ஒப்ப முறை கூறும். இதனாலேயே,

> *"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்*
> *உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி".*

என்று கூறிப்போந்தார் சுந்தரம் பிள்ளையும்.

கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில், திருவாரூரில், தலைசிறந்த நேர்மையாக ஆண்டதினால், மனுநீதிச் சோழன் என்று புகழ்பெற்ற ஒரு சோழ மன்னன் இருந்தான். அவனது ஆட்சிமுறையை மனுநீதி யென்று தமிழ் மக்கள் புகழ்ந்தார்களே யொழிய, அம்முறை எத் தகையதென்று அவர்களுக்குத் தெரியாது; அவ்வரசனுக்குந் தெரி யாது. ஒருநாள் அரசன் தன் மகன் செய்த குற்றத்திற்குரிய தண்டனையை, மனுதரும நூலினின்றும் எடுத்துக் கூறுமாறு சில பார்ப்பனரை வேண்ட, அவர்கள் அதினின்றும் கூறினது அவனுக்கு உடன்பாடில்லை. ஆகையால் அவன் தன் சொந்த முறைப்படியே தன் மகனைத் தண்டித்தான்.

(5) **மதம்:** தற்காலத்தில் ஆரிய மதமும், தமிழ மதமும் ஒன்றேயெனனுமாறு கலந்திருந்தாலும், ஆரியருக்கே சிறப்பாக வுரிய தெய்வங்களைப் பிரித்துக் கூறலாம்.

இரு மருத்துவர், எண்வசுக்கள், பதினோரு ருத்திரர், பன்னீ ராதித்தர் என நால்வகையான முப்பத்து மூன்று தேவரும், இவ ரைத் தலைமையாகக் கொண்டவர் முப்பத்து முக்கோடித்தேவர் என் பதும், தியாவுசு, பிருதுவி, மித்திரன், அதிதி, ஆரியமான், சோமம், பாசன்யா, உசா, சவிதா, பிரயா முதலிய வேதகாலத் தெய்வங் களும் ஆரியருடையன. (அக்கினி, இந்திரன், வருணன், விட்டுணு, உருத்திரன், சரசுவதி என்னுந்தெய்வங்கள் பின்னர் விளக்கப்படும்.)

இவற்றுள், சோமம் என்பது மயக்கந்தரும் ஒருவகைக் கொடிச் சாறு; உசா என்பவள் விடிகாலையின் உருவகம்.

(6) **கருத்து:** பிறப்பால் சிறப்பென்பதும் பிரமாவே மக்க ளைப் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நால்வகை யாகப் படைத்தார் என்பதும், சூத்திரனுக்கு உயர்தரக் கல்வியும் துறவறமும் இல்லையென்பதும், ஆன் (பசு) தெய்வத் தன்மையுள்ள தென்பதும், உழவு தாழ்ந்த தொழில் என்பதும், துன்பக் காலத்தில் ஒழுக்கந் தவறலாம் என்பதும் ஆரியக் கருத்துக்களாகும்.

தமிழர் ஆவைப் பயன் தருவதென்று பாராட்டினரே யொழியத் தெய்வத் தன்மையுள்ளதென்று கொள்ளவில்லை.

உழவை,

"சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்றும்,

" உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு "

என்றும் உயர்த்துக் கூறுவர் தமிழர். ஆனால், ஆரியரோ,

"சிலர் பயிரிடுதலை நல்ல தொழிலென்று நினைக்கின்றனர். அந்தப் பிழைப்பு பெரியோர்களால் பழிக்கப்பட்டது. ஏனெனில், இரும்பை முகத்திற்கொண்ட கலப்பையும் மண்வெட்டியும், நிலத்தையும நிலத்திலுள்ள பல உயிர்ப் பொருள்களையும் வெட்டுகின்றன வல்லவா?" (மனு, 10:84) என்று இழித்துக் கூறுவர்.



(ஞா. தேவநேயன்.)

தமிழம் - அறிவழகன் மறைவு.

தமிழம் செ. பன்னீர்ச் செல்வம், உலகமுதல்வி அவர்களின் முதல் மகன் திரு. ப. அறிவழகன், க.இ, அவர்கள், 15-5-76 அன்று நீச்சல் குளத்தில் குளிக்கையில் தவறி விழுந்து இயற்கையடைந்தார்.



அவர் தாமே தமிழத்தின் தக்க துணையாய், உழைப்பாய், விளங்கிக் கொண்டிருந்தார். அச்செந்தமிழ் விடுதலை வேங்கை தம் முழு மறத்தையும், திறத்தையும் வெளிப்படுத்தும் முன்பே மறைந்துவிட்டது. தன் முழு மணம் பரப்பு முன்பே அம்மலர் உதிர்ந்து விட்டது.

அவர் தம் பிரிவால் ஆற்றொணாத்துயரில் அமிழ்ந்து கிடக்கும் பெற்றோர்க்கும், உடன்பிறப்புகட்கும், மற்றோர்க்கும், தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது. —அமைச்சர்.

தென்மொழி
இலக்கிய இதழ்

சுவடி : 13 ஓலை : 4

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர் நின்றே!

மேழம்–விடை–தி. பி. ௨௦௦௭–ஏப்பிரல்–மே–'1976.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

ஆசிரியர் எழுத
இயலாத நிலையில் உள்ளார்.—அமைச்சர்.

ஆரிய திராவிட நாகரிக வேறுபாடு.

இக்கால மொழியியலும் அரசியலும் பற்றித் தமிழும் அதனின்று திரிந்த திரவிடமும் வேறு பிரிந்து நிற்பினும் பழங்காலத்தில் திரவிடம் என்றதெல்லாம் தமிழே திராவிடம் என்று திரிந்ததும் தமிழ் என்னும் சொல்லே.

தமிழ் — தமிழம் — த்ரமிள — திரமிட — திரவிட — த்ராவிட திராவிடம்.

(1) **வரணம்:** பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் ஆரிய வரணப பாகுபாடும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் தமிழ் வரணப் பாகுபாடும் ஒன்றே யென்று மேனேக்காய்ப் பார்ப்பாருக்குத் தோன்றும். ஆனால், அவை பெரிதும் வேறுபாடுடையன.

ஆரியருள், பிராமணர் என்பார் ஒரு குலத்தார்: தமிழருள், அந்தணர் என்பர் ஒரு வகுப்பார்; அதாவது பல குலத்தினின்றும் தோன்றிய சித்தரும, முனிவரும், யோகியருமான பல்வகைத் துறவிகள்.

> *"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
> *செந்தண்மை பூண்டொழுக லான்"*

என்று திருவள்ளுவர் 'நீத்தார் பெருமை' யிற் கூறியிருத்தல் காண்க.

ஆரியருள், சத்திரியர் என்பார் சீக்கியரும் கூர்க்கரும் போன்ற மறக் குலததாரும் அரசரும; தமிழருள, அரசா எனபார் அரசப் பதவியினர்; அதாவது, சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரும் அவர்க்குக் கீழ்பபட்ட பாரி காரி போன்ற சிற்றரசரும்.

ஒவ்வொரு நாட்டிலும் அங்கங்குள்ள குலத் தலைவரே அரசராவர்; அரசரென்று ஒரு தனிக்குலம் இல்லை.

ஆரியருள். வைசியர் என்பார் வணிகர், உழவு ஆகிய இரு தொழிலும் செய்பவர்; தமிழருள், வணிகர் எனபார் வணிகம் ஒன்றே செய்பவர்,

ஆரியருள், சூத்திரர் என்பார் பலவகையிலும் பிறருக்குத் தொண்டு செய்பவரும, பூணூல், வேதக்கல்வி முதலியவற்றிற்கு உரிமையில்லாதவருமான கீழ்மக்கள்; தமிழருள் வேளாளர் என்பார் உழுதும், உழுவித்தும் இருவகையில் உழவுத் தொழில் ஒன்றே செய்பவரும் எல்லாவுரிமையு முடையவருமான மேன்மக்கள்.

ஆரியப் பாகுபாட்டில் நாற்பிரிவும் குலமாகும்; தமிழப் பாகுபாட்டில் வணிகர், வேளாளர் என்னும் இரு பிரிவே குலமாகும். அவற்றுள்ளும் வணிகக்குலம் வேளாண் குலத்தினின்றே தோன்றிய

பாவலன் !

— சித்தரசு —

1. நீலவானக் கடலினிலே ஆடுவான் — மாந்தர்
நெஞ்சினிக்கும் பொருட்பாவைப் பாடுவான் !
ஆலமர வேராகி ஓங்குவான் — ஆங்கு
அளவற்ற கற்பனையைத் தாங்குவான் !—நண்ப !
அழிவில்லாத ஆக்கமாக ஏங்குவான்
அழிவில்லாத ஆக்கமாக ஏங்குவான் !

2. சாதிமத வேற்றுமையைப் பழிப்பவன் — நல்ல
சமனியத்தைப் போற்றியென்றும் களிப்பவன் !
பாதிமதி எழிலினிலே திளைப்பவன் — சுவைத்துப்
பாரெங்கும் தெளித்திட்டு இளிப்பவன் !—நண்ப !
பருவக்கோலப் பட்டியலை அளிப்பவன்
பருவக்கோலப் பட்டியலை அளிப்பவன் !

3 யாழினிசை அமுதாகக் குடிப்பவன் — கள்ளக்
கோழைகளைப் பாக்கம்பால் குமைப்பவன் !
ஆழிமீது வீரநடை நடப்பவன் — அந்த
ஆழ்கடலுள் ஆய்ந்துமீண்டும் கடப்பவன் — நண்ப !
அன்புப்பாதை தேவையென்று விடுப்பவன்
அன்புப்பாதை தேவையென்று விடுப்பவன் !

4 பண்ணுள்ள பாடலிலே தழைப்பவன் — புதுமைப்
பாவாலே பாரினிலே பிழைப்பவன் !
பெண்ணுள்ளம் தமிழென்று சொல்பவன் — மற்றைப்
பெண்ணவளின் மடமைதனைக் கொல்பவன் — பாவலன்
பீடுற்ற இளங்காற்றாய் மணப்பவன்
பீடுற்ற இளங்காற்றாய் மணப்பவன் !

உலகியல் நூறு.

— பெருஞ்சித்திரன் —

[மொழிபெயர்ப்பு: த. முத்துக்குமரன் க. இ]

3. மாந்தவியல்.

1. இயனிலை.

ஒன்றுநிலம் நீரிரண்டு மூன்றுயிர்கள் நான்கியக்கம்
நின்றியலும் ஐந்துணர்வோ டாறுமனம் ஏழுநிலை
என்றுமுயிர்க் கெட்டுவினை தொண்டுகுறை பத்துநலம்
குன்றல் மிகுதல் குறை. 11.

பொழிப்பு: மாந்த வாழ்வியலுக்கு இடனாகிய இவ்வுலகத்து * நிலப்பகுதி ஒரு பங்கும் நீர்ப்பகுதி இரண்டு பங்குமாகவும்; அவ்வுலகத்து வாழும் உயிர்கள், நீரிலும் நிலத்திலும் வானிலும் இயங்கும் முத்திறத்தினவாகவும்; அவற்றுக்கு இயக்கம் உடலும் உயிரும் அறிவும் மனமும் ஆகிய நான்காகவும்; அவ்வியக்கத்திற்கு நிலனாகிய பொறிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்தாகவும், அவை பற்றுகின்ற மனவுணர்வு காமம், வெகுளி, மயக்கம், செருக்கு, பற்று, பொறாமை என ஆறாகவும்; அவை இயங்கும் உயிர்களின் பருமவெளிப்பாட்டு நிலை மனம், பொருள், காலம், இடம், நீளம், அகலம், உயரம் என ஏழாகவும்; அவற்றின் வினை உயிர்த்தல், உண்ணல், உடுத்தல், காணல், கேட்டல், சொல்லல், செய்தல், உறங்கல் என எட்டாகவும்; அவ்வுயிர்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்தனவாகிய மாந்தவுயிர்களுக்கு ஏற்படும் குறைகள் உறுப்பு, அறிவு, கல்வி, பொருள் நலம், துணை, மகவு, மனம், உறவு என ஒன்பதாகவும்; அவற்றுக்கு உண்டாகிய நலன்கள் பிறவி, உடல், அறிவு, மனம், கல்வி செல்வம், துணை, மக்கள், தொழில், புகழ் ஆகிய பத்து ஆகவும் இயல்கின்றன. இவற்றுள் குறைவது மிகுதலும், மிகுவது குறைதலும் குறை எனப்படுமாம்.

---

* பத்தில் மூன்று பங்கு நிலமும், ஏழு பங்கு நீரும் ஆகியதைத் தோராயமாக ஒன்றும் இரண்டும் எனக் குறிக்கப்பெற்றது.

3. OF MAN'S NATURE

1. IN NATURAL STATE.

Of land one, water two, lives three, movements
Four, organs five, feelings six seven vents,
Acts eight, defects nine and benefits ten
Are in man's life, less and more as in ken ... 11.

The world, in which man lives, is of land one part* and water two Parts. The lives therein are of three kinds, as those that live on land, in the water and in the sky. Their movements are four, as of body, life, intellect and mind; and the media for these movements are the five sense-organs of body, mouth, eye, nose and ear. The mental feelings of these fivs sense-organs are, six, viz. passion, anger, stupor, egotism, longing and jealousy. The outside world will know of these through the obvious changes in the seven states of mind, material, time, place, length, breadth and width. Their acts eight are in breathing, eating, shedding, soeing hearing, telling, doing and sleeping. Of all lives; man endowed with the power of thinking, has certain defects in limb, intellect, education, materials, health, help, children mind and relatives, nine in number. The benefits to accure naturally therefrom are birth, body, intelligence, mind, education, riches, assistance, children, profession and fame, ten in number. If of these what has to be more in number decreases, it is certainly a defect.

* The land that is three-tenths and water that is seven-tenths are given here approximately to be in the ratio of one is to two.

2. குடிமை நிலை.

அடிமை மடிமை அறியாமை குற்றம்
மிடிமை களவுகொலை மீளல்—குடிமை
உரிமை உழைப்பூக்கம் ஒண்கல்வி தண்டம்
விரிமை உழவுசெயல் வேந்து. 12.

பொழிப்பு: மொழியானும் இனத்தானும், அரசானும் வந்து சேரும் அடிமை நிலையும், அதனை அகற்ற விரும்பாத மடிமை நிலையும், அதற்கடிப்படையாய அறியாமை நிலையும், அவற்றால் விளைந்து வளாகின்ற குற்றங்களும், அவை ஊன்றிய துன்ப நிலையும், அது தூண்டிய களவு நிலையும், அது வாயாவிடத்து நேரும் கொலை நிலையும் என இவற்றினின்று மீண்டுகொள்வதே ஓரினத்தின் குடிமைச் சிறப்பாகும். அச்சிறப்புப் பொருந்திய குடிகளுக்கு அவை வேண்டிய உரிமை வழங்குதலும், அவ்வுரிமை பெற்றவிடத்து அது தொடர்ந்து உழைப்பை உருவாக்குதலும், அதனை ஊக்கப்படுத்தலும், அவை தேயாத ஒள்ளிய கல்வியைத் தருதலும், அவற்றுப் பிழை சேருமிடத்துத் தண்டமிட்டுத் தடுத்தலும், உயிர் நிலைப்புக்கு அடிப்படையாகிய உழவுத் தொழிலை விரிவு செய்தலும், அக்குடிமைக்காகிய அரசின் சிறப்பு நிலையாகும்.

2. OF HUSBANDRY.

From slavery, languor, ignorance to free
As from theft, murder is husbandry.
To ensure right, work zeal, training with rod
Is for the rule to make farming all broad....... 12,

To be free from slavery of language, race and rule, the languor that wishes not to be free from that slavery, the ignorance that is the root cause of that languor, the consequent misery, that leads to theft and where it (theft) fails to murder, is a good management of life by a race and forms its special features. To accord all rights to such a race to continue its labour wirh right zeal and good education to keep it up without waning and timely punishment to right the wrong, when noticed, and to do what it can to expand agriculture, the chief basis for life, are the special features of the rule for such a race.

௩. கலப்பு நிலை.

மனக்கலப்பு வாய்க்கிலிரு மாண்குடிக்குள் நேரும்
இனக்கலப்பு குற்றமன்று மென்றும்—புனற்கலப்பு
நீரான் பெருமையுறும் நீர்மையறுங் காற்றத்தம்
பேரான் இயங்கலே பீடு. 13

பொழிப்பு: மன வொருமைப்பாட்டோடு கலத்தற்கு ஏது வாய்க்குமாஞல் மாண்பு மிக்க இரண்டு குடிகள் தமக்குள் சேர்ந்து கொள்கின்ற இனக் கலப்பு குற்றமாகாது; என்றைக்கும் நீரின் தன்மையால் இருவகைப் புனற் கலப்பு பெருமை பெற்று விளங்கும்; தம நீர்மைத்திறம் அற்றுப் போகுமாஞல், தம்தம் இயல்பான பெயர்ச் சிறப்பால் அவை தனித்து இயங்குவதே பெருமை தருவதாகும்.

3. THE STAGE OF FUSION.

When there is full mental accord, fusion
Of two good races is no wrong to pen,
Two floods ' its great by fluidity
Failing tha , each is great in unity....... 13

When there is complete mental agreement, there is absolutely nothing wrong in two exalted families meeting and mingling. Through fluidity commingling of two floods will ever be great but, when fluidity is absent, better it is that each carries on in its characteristic way.

4. மொழி நிலை.

மொழியோ டினநிலமும் மொய்த்துநலங் காணும்
வழியாய்ந் துணர்ந்து வரம்பமைக்க; தப்பின்
அழிவே நிரல்நிறையாம்; அன்றறிவார் பொய்ம்பிற்
பழியாம்; பிறன்கடைக்கும் பாழ். 14.

பொழிப்பு : மொழியும், இனமும், நிலமும் மேன்மேலும் சிறந்து நலங்காணுகின்ற வழியினை ஆய்ந்து ஓரினம் வரப்பு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறு மானால் அவற்றிற்கு முறையாக அழிவு வந்து சேர்வதாகும். அக் கால் அவ்வினத்து முன்னைய அறிவுடையாரின் புகழுக்கும் பழி வந் துறும்; அவ்வினத்தின் கால்வழியினரும் பாழாய்ப் போவர்.

4. THE LANGUAGE STAGE.

Look to enrich language, race and land
Before setting limits ; or else the band
Means destruction, entails elders' defamer
Will wipe out progeny without a name... 14.

One has to look out for ways and means to enrich one's language race and country, before setting limits. Failure will mean total annihilation. Then it will be a blot to the fair name of the ancient elders of the race and its posterity will be totally wiped out.

5. ஒழுக்க நிலை.

ஒழுக்கம் பசியின்மை ஊன்றுதொழில் கல்வி
இழுக்கம் இவையிறப்ப எய்தும்—வழுக்கலிலா
உள்ளத் தொழுக்கம் உயரொழுக்கம் ஆங்கதுவும்
கள்ளத் திடறுமக் கால்! 15.

பொழிப்பு: ஒழுக்கம என்னும் உயர்ந்த கடைப்பிடி பசியின்மையாலும, ஊன்றிய தொழில் வாய்ப்பினாலும், உள்ளம் விளக்கும் கல்வியினாலும் வந்தெய்துவதாம்! இம் மூன்றும் இல்லாதபொழுது இழுக்கம் வந்து குடிகளைச் சூழும். இந்நிலைக்குப் புறம்பாய் என்றும் வழுக்கலிலாத உள்ளத்தே அமைந்த ஒழுக்கமே உயர்வான ஒழுக்கம்; ஆனாலும், அதுவும் அம் முந்நிலைப் பிறழ்ச்சிக்கண் ஒருவரும் அறியாதவாறு கள்ளத் தன்மையான இடறுதலும் செய்யும்!

5. OF CONDUCT.

Conduct not through hunger, job through study.
These lost, low stage attaches faultless steady
Heart is virtue lofty. Even that will
Make one sure suffer when these by stealth fill. 15.

The lofty ideal of good conduct is possible. when one is not pinched by hunger ; and steady work or profession is attained through opportunities and good heart enlightened b education. When these three are not attained, lewd stage is sure to surround the subjects. Beyond this stage is the lofty virtue of the ever faultless heart. But even this will unknowingly suffer a stealthy onslaught through a revolutionary change in the state of these three.

4. பொதுமையியல்.

1. உழைப்பு நிலை.

உழைப்பொருபால் ஓங்கும் உவப்பொருபால் ஒன்னுர்
இழைப் பொருபால் ஏய்தல் இகழாம்—தழைப்பெய்தல்
வேண்டின் உடலுழைப்பு வேளாண்மை துய்ப்பிவற்றை
யாண்டும் பொதுவமைத்தல் யாப்பு!...... 16.

பொழிப்பு : உடலுழைப்பு வாழ்க்கையின் வருத்தம் ஒரு சிலர் இடத்தும், படிப்படியாக உயர்ந்து விளங்குகின்ற வாழ்க்கை நலன்களின் மகிழ்ச்சி ஒரு சிலரிடத்தும், நாட்டமைப்புக்குப் பொருந்தாத மனக்கிளர்ச்சி யுடையவர்களின் இடையூறுன செயல்கள் ஒரு சிலரிடத்துமாக அமைந்திருத்தல் நாட்டுக்கு இழுக்காம். நாடு செழிப்புறவேண்டின் மக்களுக்குப் பொதுவாய உடலுழைப்பு, உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழவு, இவ்வுலக நலன்களின் நுகர்ச்சி ஆகிய மூன்றினையும் எங்கும் எல்லார்க்கும் பொதுமை என்று அமைத்து விடுதலே பொருந்துவதாகும்.

4. NATURE IN GENERAL.

1. STATE OF LABOUR.

Some work, some thrive, when some ruin plan,
Speak bad of land. It prosper can,
If work, farming and benefits all,
These th ee as lot of all shall fall. 16.

If in life there be hard labour for some, pleasure for some through gradual rise to a high status in life and revolutionary attitude in some, that are bent on undermining the constitutional set-up, it will be rather a degrading for the nation. The prosperity of the countty will depend upon these three, namely, labour, the indispensable agricultural operation and the benefits to accrue, be common to all to share.

2 பொருள் நிலை.

உடல்கருவி மூளையெனும் ஒண்பொருள்கள் மூன்றில்
அடலுழைப்பா லாக்குவதே ஆக்கம் - கடல் நிலத்தின்
உள்ளும் புறமும் ஒளிர்வதெல்லாம் மாந்தரினம்
அள்ளும் படிநிலைக்கே ஆம்! 17.

பொழிப்பு : உடல், உருவாக்கப்பெற்ற கருவி, இவற்றுக்கு அடிநிலையாகிய அறிவு ஆகிய ஒளிப்பொருள்கள் மூன்றினாலும் வருந்தியுழைத்து உருவாக்குவதே செல்வம். கடல், நிலம் இரண்டின் உள்ளேயும் மலர்ச்சியுற்றுக் கிடக்கும் செல்வமெல்லாம், மக்களினம் வாரி நுகர்ச்சி கொள்ளும் படிநிலைகளுக்கே என்க.

2. THE STATE OF WEALTH.

Body, weapon and subtle brain,
Strain and pain, all wealth to gain,
Things in and out of land and sea,
For all to take, enjoy shall be. 17.

Riches accrue as a joint labour of body, weapon and the subtle knowledge (of man) (And so) things, that are seen on the surface and inside land and sea, are for all mankind to take and enjoy.

"எமர்சன் தன்னுணர்வு"

பழைய தென்மொழிகளில் இடம்பெற்ற எமர்சன் தன்னுணர்வு (Emerson's self reliance) என்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் அருமையான மொழிபெயர்ப்புக் கட்டுரையை நூல் வடிவில் வெளியிட எண்ணித் தொடங்கியுள்ளோம், அதன் விலை ஓர் உருபா எனவும் மதிப்பிட்டுள்ளோம். நூல் தேவையானவர்கள் முன்கூட்டிப் பதிவு செய்து கொள்க —அமைச்சர், 'தென்மொழி'.

௩- உறையுள் நிலை

திருக்குவைசூழ் மாடத் தெருக்கடையின் ஓரத்
துருக்குலையும் வாழ்க்கை ஒழிக – பெருக்கமுறும்
வான்தோய் வளமனைக்குள் வன்குடில்வாழ் ஏழையர்தம்
கான் தோயுங் காலம் வரும். 18,

பொழிப்பு : அழகிய செல்வ வளம் சூழ்ந்திருக்கின்ற மாட மாளிகைகள் நிறைந்த தெருக்களின் ஒதுங்கிய ஓரங்களில் வாழ்ந்து உருக்குலைகின்ற துயர் வாழ்க்கை இவ்வுலகைவிட்டு ஒழிவதாகுக! நாளும் பெருகித் தோன்றும் வானளாவிய வளமிக்க மனைகளுக்குள் மிகச்சிறிய குடிசைகளில் வாழ்கின்ற ஏழை மக்கள்தம் கால்கள் தோய்கின்ற காலம் வந்தே தீரும்!

3. THE STATE OF RESIDENCE.

Wasting body that living ply,
In streets by rich, big homes shall fly !
On floor of sky-scrapers that spread
Soon shall the poor in low h ut tread. 18.

The miserable life of the poor, with wasting body, on the sides of streets that abound in sky-high palatial buildings, wherein riches hold sway, shall go ! On the floor of the cosy, roomy bungalows, that are daily on the increase, very soon the poor in wretched huts shall tread: that day is sure to come.

4. உடைமை நிலை

உடல்நிலத்துக் குள்ளம் உயிர்க்குடைமை என்றும்
கடல் நிலத்துச் செல்வம் கணக்காம் – கெடல் நலத்து
நல்லறிவும் நல்லுழைப்பும் அல்லால் நலமில்லை
புல்லறிவால் துன்பம் பொது 19.

பொழிப்பு : நிலத்துக்கு உடலும், உயிர்க்கு உள்ளமும் உடைமைப் பொருள்களாகும். ஆகையால் நிலத்தின் அளவாகவும உயிர்கள் அளவாகவுமே அவற்றின் உடைமைப் பொருள்களாகிய உடலெடுத்த பிறவிகளும், உள்ள உணர்வுகளும் தோன்றும். எனவே, கடலுள்ளும் நிலத்துள்ளும் உள்ள செல்வங்கள் ஆங்காங்குத் தோன்றுகின்ற உயிரிகளுக்குக் கணக்கியல் முறைப்படி போதுமானவையாகவே இருக்கும். கேட்டிலும் நலத்திலும் நல்லறிவும் நல்லுழைப்பும் இணைந்து நின்றாலல்லது உயிர்களுக்கு நலம் உண்டாவதில்லை. புன்மை மிக்க அறிவால் விளைகின்ற துன்பம் எல்லாருக்குமே பொதுவாகி விடுகின்றது.

4. THE STATE OF HOLDINGS.

Body, land, mind to life do hold,
And things on land as well, we're told.
In weal or woe, mind Spreme shall reign
Or woe will show difference to none. 19.

The body to the earth belongs; and life to the heart and all things belong. And to the extent they are shall the earth and life own things and embodied beings and feelings. As such, the riches of the sea and land shall be reckoned as the holdings, generally sufficient enough for the lives that are there. Unless knewledge and labour work jointly and harmoniously, in weal or woe, no good accrues to creatures alive. Suffering, resulting from puerile mind is common to all.

5. நுகர்ச்சி நிலை.

இடங்குடிபால் எண்காலம் எந்நிலைக்கும் துய்ப்பு
முடங்கரவு வஞ்சமின்றி மூளல் – கடனாகும்
ஆன்ற பொதுமைக் கரசமைப்பார் தங்கால்கள்
ஊன்ற உழைக்கும் உலகு. 20

பொழிப்பு : இடம், குடி, பால், எண், காலம் ஆகிய வேறுபாடுகளின்றி எந்த நிலைக்கும், செல்வ நுகர்ச்சியானது முடக்கலும் கரத்தலும், வஞ்சித்தலும் இன்றி ஆகி வருதலே கடப்பாடாகும். இயற்கையாகவே அமைந்து கிடக்கும் அப் பொதுமைக் கொள்கைக்கேற்ப அரசியலை அமைக்க விரும்புவார்தம் அடிகள் ஊன்றுதற்கே இவ்வுலகம் உழைப்பதாகின்றது.

5. THE STATE OF ENJOYMENT.

Enjoyment full, place, birth to slight
Sex, number, time as well, but right.
Who form rule making this common
On support of world can reckon. 20

At all stages, regardless of place, birth, sex, number and time, it is but right that enjoyment should be full-with without diminution, concealment or cheat. To establish and keep up this commanality, these who strive shall have the unequivocal support of the universe.

தென்மொழி, மறை - நித்தலின்பனார் தம் தாயார் வள்ளியம்மையின் நினைவாகத் 'தென்மொழி'க்கு 101-00 உருபா கொடுத்துள்ளார். அவர் தம் தாயாரின் நல்லுள்ளத்தைத் தென்மொழிஎன்றும் மறவாது.

பாவேந்தர் . . . . பாட்டரங்கம்.*

முன்னுரை :

பேரன்பு கொண்டவரே ! பெரியோரே !
தாய்மாரே ! பெருமை மிக்கக்
காரம்பு மழைபொழியும் கழனிமிகு
எழிலுறந்தைக் கவின்மிக் கோரே !
நீரம்பொன் நெல்விளைத்துச் சோறுதரும்
நெடும்புகழ்சேர் தஞ்சை யோரே !
வீரம்பொய் யாத்தடந்தோள் இளைஞர்களே !
விறல்தமிழால் வணங்கு வேனே !

பாவேந்தன் பெருவிழாவாம் ! இவ்விழாவில்
பாவலர்யாம் பாட வந்தோம் !
மாவேந்தன் பாட்டிலவன் ! மறல்வேந்தன்
புரட்சியிலே ! மலர்மி குந்த
காவேந்துங் கருங்குயில்போல் தமிழகத்தின்
கரையணைந்த புதுவை தன்னில்
சாவேந்தும் வரையினிலே செந்தமிழைச்
சலிப்பின்றிப் பாடி னானே !

இக்காலும் தமிழ்ப்பாடும் புலவருளார் ;
இரந்துசோ றுண்ண வேண்டித்
திக்காலுக் கோரிருசொல் பழந்தமிழில்
திருடியொரு பாட்டைச் செய்து
முக்காலும் என்பாட்டே நம்புங்கள்
எனப்பொய்யால் முக்கா டிட்டுப்
பொக்காயும் பதராயும் தமிழ்வளர்ப்பார் ;
போலிலனே புதுவை வேந்தன் !

(வேறு)

தக்கதமிழ்ச் செழுந்தீம்பா ! நற்றமிழ்ப்பா !
தனிச்சுவைப்பா ! தண்டமிழ்ப்பா ! தப்பாதப்பா !
எக்காலுந் தமிழிரிடை இருந்தமிழ்ப்பா !
இணையிற்பா ! எழில்சேர்பா ! இலக்கணப்பா !

---

* தி. பி. 2006, விடை 17, (31-5-75) அன்று, உரத்தநாடு அரசுயர் பள்ளியில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

முக்காமல் முணகாமல் முகிழ்த்ததப்பா !
முறுவல்பா ! புரட்சிப்பா ! முழுதுந்தேன்பா !
செக்காடும் ஓசைவராச் செந்தமிழ்ப்பா !
சிறப்புப்பா ! சுவையப்பா ! சொல்வா யப்பா !

காராடும் குளிரிருக்கும் ! கதிராடும்
கனப்பிருக்கும் ! காற்றிருக்கும் ! ஊற்றிருக்கும் !
சீராடும் குழந்தைக்குச் சிணுங்காத
சிரிப்பிருக்கும் ! செழிப்பிருக்கும் ! செழும்பூஞ்சோலை
நீராடும் கன்னிக்கு நினைவிருக்கும்
படிகாதல் நிகழ்விருக்கும் ! அன்பிருக்கும் !
போராடும் வீரர்க்குப் புரட்சியெனும்
புத்துணர்வால் தோள்களெலாம் புடைக்கும் அன்றோ!

(வேறு)

தமிழ்க் குடும்பத் திட்டம்
தந்திருப்பார் அங்கே !
குமிழ்த் தெழுந்த இன்பம்
குவித்திருப்பார் பாட்டில் !
சிமிழ்த் துவிழி யாத
செந்தமிழ வீரர்
தமிழ்ப் புரட்சித் திட்டம்
தந்திருப்பார் பாட்டில் !

ஆரியத்துக் கோழைக்
கடிமையுற்ற போதில்
வீரியத்தை நாமும்
விட்டுவிட்ட போதில்,
கூரியசொல் வாளால்
குத்திமறம் கீண்டி
நேரியபு ரட்சி
நிகழ்த்திவைத்த கோமான் !

(வேறு)

பாவேந்தன் சொல்லெடுத்துத் தன்மானந் தணைக்குழைத்துப்
பாட்டென்று தாரா விட்டால்,
நாவேந்தும் மொழியெல்லாம் சமற்கிருதம் ! கதைகளெலாம்
இராமன்கதை பாரதந்தான் !

பூவேந்தும் கைகளிலே புழுக்கையினை அன்றேநாம்
ஏந்திநிலம் புதைந்திருப்போம்!
ஈவேந்தும் கடமையினால் விழா வெடுப்போம்!
எனினும்வினை இம்மி செய்யோம்!

(வேறு)

செந்தமிழர் தோள்களிலே மறமேற்றி
வைத்தசெம்மல்! செழுந்தீம் பாவால்
எந்தமிழர் நாவினிலே இனித்ததமிழ்க்
கண்டெடுத்தே இழைத்த வேந்தன்!
அந்தமிழப் பெண்டிரெலாம் அணியணியாய்
ஆரியத்தால் அழிந்த போதில்
வந்துதமிழ் மானத்தைத் தூண்டுவித்து
மங்கையரைக் காத்த வீரன்!

கைம்பெண்கள் எழுகென்றான்; கடிமணங்கள்
செய்கென்றான்! கன்னிப் பெண்கள்
மொய்ம்புதரும் காதலினால் தாம்விரும்பும்
ஒருவனையே முடிக்க என்றான்!
செய்ம்புதுமை ஒன்றன்றே அவன்பாட்டில்!
சீர்திருத்தம் முழங்கச் செய்தான்!
பைம்புதரில் பூத்ததமிழ்ப் பூவானான்!
பைந்தமிழ்ப்பூந் தும்பி யானான்!

ஒட்டாரங் கட்டியொரு சொல்லுக்கே
ஊர்முழுதும் அலைந்து தேடிக்
கொட்டாவி விட்டுமுகம் மேல்பார்த்துக்
கீழ்ப்பார்த்துக் குனிந்தெழுந்து
கட்டாத பாட்டெல்லாம் மொழிக்கயிற்றில்
கட்டியொரு 'கவி'யென் றூரைத
தெட்டாமல் தெட்டிவரும் பொய்ப்புலவர்
போல்அல்லன் புதுவை வேந்தன்!

மாணிக்கச் செழும்பரிதி மேற்றிசையின்
வானத்தில் மறையும் போதில்
ஆணிப்பொன் முத்தெனவே கீழ்த்திசையில்
நிலவொளிரும் அழகைப போல

ஏணிக்குப் படிபோல ஒருசொல்மேல்
ஒன்றுவந்தே இறங்கு கின்ற
பாணிக்கிங் கார்புலவன் ; பாவேந்தப்
புலவனல்லால் ? பாவல் லோரே !

கண்ணனுக்குத் தூசனென்பான் 'கவி'யெழுத
வல்லனென்பான் ; கழுத்த றுப்பான் !
புண்ணுக்குச் சீழ்போலப் புழுவுக்கு
மலம்போலப் புதுமை யென்னும்
மண்ணுக்குச் செந்தமிழால் மாரடிப்பான் !
மாண்பிழப்பான் ! மலத்தைத் தின்னும்
பெண்ணுக்குப் பிறக்கின்ற குட்டிகள்போல்
பாப்பலவாய்ப் பெற்ருன் அங்கே !

ஆயிரம்பேர் நடுவினிலே பெண்விளக்கை
நிறுத்தியங்கே அவிழ்த்துப் போட்டு
வாயினிலே நீருற்றல் போல்மதுவை
வயிரார மண்டி விட்டுக்
காயாயும் பிஞ்சாயும் சொல்லுதிர்த்துக்
காட்டியவை கனிகள் என்றே
வாயுரமாய் பேசுகின்ற வகையல்லால்
நல்லதமிழ் வழக்கங் குண்டோ ?

பளபளக்கும் திரைப்படத்துக் கூத்தியர்தாம்
பண்பிழக்கும் பான்மை யெல்லாம்
வளவளக்கும் சொல்லாலே வழித்தெடுத்துப்
பாட்டென்னும் வடிவங் காட்டித்
தொளதொளக்கும் ஆடையிணைச் சிறுகுழந்தை
போட்டதுபோல் துவளக் காட்டும்,
சளசளக்கும் ஓசையெல்லாம் பாட்டென்ருல்
செந்தமிழும் சாதல் நன்றே !

ஆடையினை முற்ருக அவிழ்த்துப்போட்
டாடுவதே ஆடல் என்ருல்,
ஓடையிலே நீர்போல ஒன்பதுகோ
டிப்பாடல் உரைக்க வல்லோம் !
கூடையிலே வாருகின்ற சரளைகள்போல்
கோடிப்பா குவித்தும் என்ன ?

"தென்மொழி நினைவுகள்."

— மறைமலையடியுறை —

மெய்த்தமிழ்! அன்பர் நெஞ்சகங் குளிர நிகழ்வுறும் 'தென் மொழி'யானது, அற்றைப் பிறப்பாம் நெடுந்தமிழை, இற்றைக் குள்ளராம் குறுந்தமிழர்க்கு — "செந்தமிழே உயிர் மூச்சு", "செந் தமிழே உயர் வாழ்வு"—என அறிவுறுத்தி, நம் தமிழகத்தை முப் படி நிலையில் முன்னேற்றும் முழுத்தமிழ்த் தொண்டிற்கே தானெனத் தோற்றம் பெற்று, ஏறத்தாழ ஒருபானேழ் யாண்டுகள் நிறைந் தோடிவிட்டன.

இப் பதினேழாட்டைக் காலத்தில், தென்மொழி, தனித்தமிழ் மறைமலை தலை நிற்ப, அவர் வழிநின்று விழியோச்சும் மொழிஞாயிறு பாவாணரின் அடிபற்றித் தன் முடித்தொண்டில் முனைந்தது. முனைந்து, இருளின் புகலிடத்து ஒளியற்றிருந்த நந்தமிழ் மாக்களை, அவர்கள் துன்பத்தை அவர்கட்கே எடுத்துணர்த்தி, அவர்களின்

பாடையிலே போகின்ற பிணம்போலுன்
பாடலெல்லாம்! பயனென் காண்போம்!

பாவேந்தன் மொழியுணர்வுப் பாடலொன்றைக்
குழந்தைக்கும் படித்துக் காட்டில்
நாவேந்தும் செந்தமிழை! நல்லுணர்வை
நெஞ்சேந்தும்! நடையில் வீரம்
தாவேந்திச் சதிராடும்! இனப்பற்றுத்
தழைத்துவரும்! தமிழ்நாட் டுக்குக்
காவேந்தி வல்பகையை ஓட்டிவிடும்
திறம்முகிழ்க்கும்! காண்பாய் இன்றே!

அத்தகைய புதுமைப்பா, புரட்சிப்பா
ஆக்கிவைத்த அண்ண லுக்கே
இத்தகைய விழாவெடுப்பார் எந்தமிழர்!
இழிவுக்கா ஏற்றஞ் செய்வார்!
புத்தகத்தைப் புரட்டாமல் புழுத்திருக்கும்
இந்துமதம் புரட்டு கின்ற
எத்தகத்தைக் கண்டுகொள்வார் எந்தமிழர்
இனிவருநாள்! ஏற்றங் காண்பார்!

(தொடரும்.)

உள்ளத்தைக் கிளர்த்தியும், மலர்த்தியும் பேச வைத்தது! அவர்களை மக்களெனும் மாந்தராக்கியது. அவர்களின் அறிவு விடாயை எழுப்பி, அவர்கட்கு அறிவுணர்வை ஊட்டியது; அமைதி புயலென்னும் உயிரியக்கப் போராட்டத்தில் ஆழ்த்தியது. அவர்களின் உணர்வு முக்கோணத்தின் புறமுனையாம் சொல்முனையைக் கூர்தீட்டிச் சீராக்கித் தந்தது. அவர்கட்கு இறைமுதல் நோக்கி நடையிடும் இயற்கைப் பெருவாழ்க்கை ஈதெனக் காட்டித் தந்தது அவர்களின் உயிர்த்தேவையான பசியைக் கிளறிக் கீண்டிவிட்டு அவர்களின் உயிர் வளர்ச்சிக்கு அடிகோலியது. செல்வத்தின் நல்கைப் பயன்பாட்டை அவர்கட்கு நினைவூட்டியது. கண்கண்ட பொருள் அனைத்திலும் கூத்திடும் அழகின் இயற்கையை அவர்கள் பெற அளித்தது.

இவை எல்லாவற்றின் அழிவும், யாவரும் விரும்பிப் பெற வேட்கை கொள்ளும் இன்ப மலர்ச்சிக்கு, அவர்களைத் தடங்காட்டி வழிநடக்கப் பணித்தது.

வாழ்வியற் போலிகளை இனங்கண்டு ஒதுக்கி ஈடேறும் நெறிகளைக் கற்றுத் தந்தது.

உள்ளீடற்ற சொற்குப்பைகளையும் எழுத்துக் கூளங்களையும் தவிர்த்து, செம்மையற்ற ஒழுக்கத்திற்குத் தடைபோடும் நல்லிசைப் புலமை தரும் இலக்கிய உணர்வினை ஈட்டிப் படைத்தது.

அஃதேபோல், உள்ளத்திற்கு மெய்யறிவு ஏற்றும்படி அமைந்து பொதிந்த பாட்டுணர்வை, ஆயிரம் ஆயிரம் பாடல்களின் வாயிலாக வடித்தெடுத்து ஈந்தது.

எள்ளுவன இகழ்ந்து, இகழ்ந்து, தள்ளி, கொள்ளுவன கொண்டு, நிலைவிக்கும் உள்ள உணர்வினை வளர்த்தது.

மெய்யறிவு உணர்வுகளைத் தோய்ந்து கண்டு, துய்த்து, நிலைபெறும் வகை முறைகளைத் தெளிவுறுத்தி ஆற்றுப் படுத்தியது.

உள்ளமும் அறிவும் போக்கி உயிரைத் தலைவிக்கும் மடி துயிற்றத், துயிலும், உறக்கத்தின் துறக்கத்தை வற்புறுத்தி வலிவேற்றிச் சென்றது.

[தொடர்ச்சி 33-ஆம் பக்கம் பார்க்க.]

உடலியல்

குருதிச்சோகை - (ANAEMIA)

வீ. செ. அன்பழகன்,

முன்னுரை :

மாந்தர் உடலினுள் உள்ள எண்ணற்ற குழாய்களின் ஊடே, இடைவிடாமல் ஓடிக்கொண்டிருக்கும் செவ்வண்ண நீர்மத்திற்குக் "குருதி" [Blood - அரத்தம்] என்று பெயர். இக் குருதியில் 45 விழுக்காடு [45%] திடப்பொருள்கள் அடங்கியுள்ளன. இத் திடப் பொருள்களில் பெரும்பகுதி குருதிச் செவ்வணுவாகும். [Red Blood Corpuscle]. மற்றைய பகுதி குருதி வெள்ளணுக்களாலும் [White Blood Corpuscle], குருதி நுண் தகடுகளாலும் [Platelets] ஆக்கப் பட்டுள்ள குருதிச் செவ்வணுக்களில், "செவ்வண்ணக் காரணி" [Haemoglobin] என்னும் இருப்புச்சத்து நிறைந்த வேதிப் பொருள்கள் அடங்கியுள்ளது. இவ்வேதிப் பொருளே செவ்வணுவுக்கு [Redcell] வண்ணத்தையளிக்கின்றது. குருதியில் இச்செவ்வணுக் களின் எண்ணிக்கை குறிப்பிட்ட அளவைவிடக் குறைந்தாலோ (அ) செவ்வண்ணக் காரணியின் அடர்த்தி குறைந்தாலோ உண்டாகும் நோய்க்குக் "குருதிச் சோகை" [Anaemia] என்று பெயர்

கரணியங்கள் :

குருதிச் செவ்வணுக்கள் எலும்பின் உட்பகுதியில் உள்ள "என்பூன்" [எலும்பு + ஊன் - Bone Marrow] எனப்படும் கொழுப் புப் பொருளால் தோற்றுவிக்கப்படுகின்றன. செவ்வணுவின் ஆக்கத்திற்கான மூலப்பொருள்களை என்பூன் செரித்த உணவுப் பொருளிலிருந்து பெற்றுக் கொள்கிறது. சிராய்ப்பு, வெட்டுக்காயம் முதவியவற்றால் ஏற்படும் குருதிக்கசிவின் மூலம் வெளியாகும் செவ் வணுக்களின் எண்ணிக்கை, என்பூனில் தோற்றுவிக்கப்படும் செவ்வணுக்களால் ஈடுசெய்யப்படுகின்றது. ஒரு செவ்வணுவின் வாழ்நாள் சுமாராக 120 நாள்கள். இதற்குப்பின், அச்செவ்வணு

அழிந்துபடும். இக்கரணியங்களினுல் குருதி ஓட்டத்தில் [Blood Circulation] செவ்வணுக்களின் எண்ணிக்கை குறையும். இவற்றை என்பூனினுல் ஈடுசெய்ய முடியாதபோது குருதிச்சோகை ஏற்படுகின்றது.

பொதுவாக, குருதிச்சோகை மூன்று தலையாய கரணியங்களால் உண்டாகலாம். அவையாவன :

(க) உட்கொள்ளும் உணவிலுள்ள குறைபாடுகளினுல் ஏற்படலாம். இஃது ''பற்றுக்குறைச் சோகை'' [Deficiency Anaemia] எனப்படும்.

(உ) என்பூனுக்குத் தடை ஏற்படுவதால் உண்டாகலாம். இஃது, ''என்பூன் தடைச்சோகை'' [Bone-marrow Disturbance] எனப்படும் ; கடைசியாக,

(ங) குருதிப் பெருக்கின் [Haemorrhage] மூலமோ, (அ) செவ்வணுக்களின் அதிக அழிவினுலோ குருதிச் சோகை உண்டாகலாம். இஃது, ''செவ்வணுயிழப்புச் சோகை'' [Loss of redcell] எனப்படும்.

இவையல்லாமல், செவ்வணுக்களின் அளவின் கரணியமாகவும் இந்நோய் உண்டாகலாம். செவ்வணுக்கள், மிகச்சிறியனவாயிருப்பதால் உண்டாகும் சோகை, 'நுண்ணணுச் சோகை' [Microcytic anaemia] என்றும் மிகப்பெரியனவா யிருப்பதாலுண்டாகும் சோகை ''பேரணுச் சோகை'' [Macrocytic anaemia] என்றும் கூறப்படும். இரும்புச் சத்து குறைவாயிருந்தால் செவ்வண்ணக் காரணியின் அடர்த்தி குறைந்து, செவ்வணுவின் அளவு சிறுத்து, ''நுண்ணணுச் சோகை'' உண்டாகும். கல்லீரல் [Liver] அடங்கியுள்ள ''கல்லீரல் சாற்றுக்காரணி'' [Liver extract factor] குறைந்தால் பேரணுச் சோகை உண்டாகும். மேலும் பல கரணியங்களினுலும் இந்நோய் உண்டாகலாம்.

(க) பற்றுக்குறைச் சோகை - (Deficiency Anaemia) :

நோயின் கரணியங்கள் :

இவ்வகைக் குருதிச்சோகை உடையவர்களின் என்பூன் [Bone-Marrow] நல்ல நிலையிலிருக்கும். ஆனுல் அவர்கள் உட்கொள்ளும்

உணவில் குருதி ஆக்கத்திற்கு வேண்டிய சத்துப் பொருள்கள் குறைவாயிருக்கும். எனவே, இவ்வகை நோயுள்ளவர்கள் இரும்புச் சத்துள்ள பொருள்களான, புலால் (மாமிசம்), ஆட்டுக் கல்லீரல், முட்டை, பால் முதலியவற்றைத் தங்கள் உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். கடுமையான வயிற்றுப் போக்கு உள்ளபோது மேற்கூறிய பொருள்களைச் சேர்த்துக்கொண்டாலும் பயனிருக்காது. எனவே, வயிற்றுப்போக்கை முதலில் கட்டுப்படுத்த வேண்டும்.

சிலருக்குக் கல்லீரலில் ஏற்படும் கோளாறுகளினால் அதில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் செவ்வணு ஆக்கத்திற்குத் தேவையான சத்துப் பொருள்கள் வீணாகி, குருதிச்சோகை உண்டாகும். கருவுற்றிருக்கும் பெண்ணின், கருப்பையில் ஒன்றுக்கு மேற்பட்டு கருக்கள் வளர்ச்சியடைந்திருப்பின், அக்கருக்கள் தம் வளர்ச்சிக்குத் தேவையான சத்துப் பொருள்களைத் தாயினிடமிருந்து எடுத்துக் கொள்கின்றன. அவை எடுததுக்கொள்ளும் அளவுக்குத் தாய் சத்துப்பொருளை இழக்கமுடியாத நிலையிலிருந்தால், அத்தாய் பற்றுக் குறைச் சோகையினால் துன்பப்பட நேரிடும்.

இரும்புச்சத்து, கல்லீரச்சாறு [Liver extract], உயிர்ச்சத்து - ஆ [Vitamin-B] முதலிய சத்துப் பொருள்களில் குறைவினால் உண்டாகும் சோகைகள் முறையே, (1) "இரும்புக் குறைச் சோகை" [Iron deficiency Anaemia]; (2) "கடுங் குருதிச்சோகை" [Pernicious anaemia] (3) "உயிர்ச்சத்துக் குறைச்சோகை" என்று கூறப்படும். இவை ஒவ்வொன்றினைப் பற்றியும் ஆராய்வோம்,

1. இரும்புக் குறைச்சோகை :

இவ்வகைச் சோகை இரும்புச் சத்துக் குறைவாலும், சிறுவர்களுக்கு வரும் தொத்து நோய்களாலும், இரைப்பையில் [Stomach] ஏற்படும் காடிக் குறைவினாலும் [Hydrochloric Acid], கருப்பையின் பல கருவளர்ச்சியினாலும் அதிகமான வயிற்றுப் போக்கினாலும். திங்கள் (மாத) விலக்கின்போது அதிகமாகக் குருதி வெளியாவதாலும் ஏற்படுகின்றது. இந்நிலையில் செவ்வணுக் காரணியின் ஆக்கம் குறைந்துவிடுகிறது.

நோயின் அறிகுறிகள் - (Symptoms) : நோயாளியின் தோல் சுருக்கங்களுடன், வெளுத்ததுபோல் தோன்றும். நாக்கு பளபளப்பாயிருக்கும். முடி பளபளப்பை இழந்து பழுப்பாக மாறும். விரல் உகிர்கள் உறுதி குறைந்து காணப்படும்.

2. கடுங்குருதிச் சோகை - (Pernicious Anaomia) :

கரணியம் : இந்நோய் இசுகாண்டிநேவிய மக்களிடமும், இத்தாலியர்கள், ஆப்பிரிக்கக் கருப்பர்களிடமும் மிகுந்து காணப்படு கிறது. இந்நோய் இரைப்பைச் சாற்றில் [Stomach Juice] குறிப் பிட்ட ஒரு சத்து நீர் [Enzyme] குறைந்த அளவில் இருந்தால் உண்டாகும். இச்சத்து நீரே, சிறு குடலிலுள்ள குடலுறிஞ்சிகள் [Villi], புரதச்சத்தை [Protein] உறிஞ்ச உதவுகின்றது. இச்சத்து நீர்க் குறைவதால், புரதச் சத்து உறிஞ்சப்படுதல் குறையும். அதன் பயனாக கல்லீரலில் சேர்த்து வைக்கப்படும் சத்துப் பொருளான கல்லீரற் சாறு குறையும். இக்குறைவினுல் என்பூனுக்களிக்கப்படும் சத்து தடைப்பட்டு, என்பூன் தனித்தன்மை பெறுகிறது. தனித் தன்மை பெற்ற என்பூன், அளவில் பெரிய செவ்வணுக்களை தோற்றுவிக்கின்றது. எனவே, முன்பு கூறியதைப்போல பேரணுச் சோகை [Macrocytic amaemia] உண்டாகிறது. இந்நோய் உட லுக்கு மிகுந்த கெடுதி பயப்பதால், இது கடுங்குருதிச் சோகை எனப்பட்டது.

நோயின் அறிகுறிகள் : இந்நோயுள்ளவர்களின் நாக்கு வழுவழுப்பாகி, சிவந்து காணப்படும். தண்டுவடம் [Spinal cord] கேடுற்று, மூட்டுகளில் பிடிப்பு முதலியன உண்டாகின்றன. சில சமயங்களில் நோயாளியின் தோல் ஒருவிதமான மஞ்சள் வண ணத்தைப் பெறுகிறது. பற்களின் ஈறுகளில் சீழ் [Pus] வரலாம். சில காலங்களுக்குப் பின் கால்களில் வீக்கம் ஏற்பட்டு, நடத்தல் கடினமாகும். இந்நோயைக் குருதி ஆய்வு [Blood test] செய்து அறியலாம்.

பண்டுவம் : கல்லீரற் சாற்றை ஊசியின்மூலம் [Injection] பல காலங்களுக்கு நோயாளியின் உடலில் செலுத்தவேண்டும். அரைகுறையாக நிறுத்திவிடின், நோய் மறுபடியும் உண்டாகி, நரம்பு மண்டலங்களில் முறுக்கு [Crippling of nervous System]

ஏற்பட்டு, தீர்க்கமுடியாததாகி விடும். "போலிகக்காடி" [Folic acid] என்னும் உட்கொள்ளக்கூடிய வேதியப்பொருள் கல்லீரற் சாற்றைவிடச் சிறந்தது. உயிர்ச்சத்து-ஆ 12 [Vitamin - B-12] என்னும் வேதியப்பொருளும் கடுங்குருதிச் சோகையை வெல்வதில் சிறந்தது. மகப்பேற்றின்போது குருதிப்போக்கு அதிகமாவதால் 'குருதி ஊட்டலே' [Transfusion] மிகச் சிறந்தது. இம்முறையில் ஒருவர் உடலிலுள்ள குருதி, அதே குருதி வகுப்பைச் [Blood group] சார்ந்த குருதியுடைய நோயாளியின் உடலில் செலுத்தப்படும். இம்முறை குருதிச் சோகையை நீக்க உகந்தது.

3. உயிர்ச் சத்துக் குறைச்சோகை :

இச்சோகை "உயிர்ச்சத்து-ஆவின் கூட்டுப்பொருள்" [Vitamin -B-Complex] குறைவினுல் உண்டாகின்றது. இதன் கரணியமாகத் "தீட்டிய அரிசி நோய்" [Beri-Beri] உண்டாகிறது. இந்நோய் நீங்க ஆ-கூட்டுப்பொருள் [B-Complex] அடங்கிய உணவுப் பொருள்களை உட்கொள்ளவேண்டும். ஆ-கூட்டுப்பொருள் வில்லைகளையும் [B-Complex tablets] உட்கொள்ளலாம்

(உ) என்பூன் தடைச்சோகை - [Anaemias of Bone marrow Disturbance] :

கரணியங்கள் : என்பூன் செவ்வணுக்களை தோற்றுவிப்பதால், என்பூனுக்கு ஏற்படும் சிதைவுகள் குருதிச்சோகையை ஏற்படுத்துகின்றன. இவ்வகைச் சோகைக்குப் பல காரணங்கள் உண்டு. மண்ணீரலின் [Spleen] வளர்ச்சி ; வெள்ளணுப் பெருக்கிகள் [Leukemic cells] (அ) வீக்கமுண்டாக்கியணுக்கள் [Tumour cells] என்பூனின் மீது வளர்தல் முதலியவற்றின் கரணியமாக இந்நோயுண்டாகலாம். இதை இருவகையாகப் பகுத்து ஆராய்வோம்.

1. என்பூன் உருக்கிச்சோகை-[Myelophthisic Anaemia].

என்பூனின்மீது வெள்ளணுப் பெருக்கிகள் [குருதிப் புற்றை உண்டாக்கும் உயிரிகள்]. (அ) வீக்கமுண்டாக்கி யணுக்கள் மிகுதியாக வளர்ந்து என்பூனை அழிக்கின்றன. இதனுல் செவ்வணுக்களின் ஆக்கம் குறைந்து குருதிச்சோகை ஏற்படுகின்றது. இந்நோய்க்குப் பண்டுவம் சரிவரப் பயனளிப்பதில்லை.

2. மண்ணீரல் சோகை-[Splenic Anaemia] :

இவ்வகைச் சோகையுள்ளவர்களின் மண்ணீரல் பெரியதாக வளர்ந்திருக்கும். இது குருதியணுக்களை அழிக்கவல்லது. சில வேளைகளில் செவ்வணுக்கள், என்பூனை விட்டுச் சரியான அளவில் வெளிவர முடியாமல் மண்ணீரல் தடை செய்கிறது. இவற்றின் கரணியமாகக் குருதிச்சோகை உண்டாகின்றது. இந்நோயை நீக்க, மண்ணீரலை அறுவைமுறையில் நீக்குதல் [Splenectomy] வேண்டும்.

(க) செவ்வணுயிழப்புச் சோகை[Anaemias of Loss of RBC]

கரணியங்கள் : இது குருதியிலுள்ள செவ்வணுக்களின் எண்ணிக்கைக் குறைவதாலுண்டாகின்றது. அந்நிகழ்ச்சி இரு வழிகளில் நிகழலாம். முதலாவதாக, வெட்டுக்காயம், திங்கள் விலக்கு (மாத விலக்கு) முதலியவற்றால் ஏற்படும் குருதிப் பெருக்கின்மூலம் செவ்வணுக்கள் குருதி யோட்டத்திலிருந்து [Blood circulation] வெளியேறலாம் இம்முறையாலுண்டாகும். சோகை "குருதிப் பெருக்குச்சோகை" [Haemorrhagic anaemia] எனப்படும். மற்றொரு வகை செவ்வணுக்களுக்கு ஏற்படும் சிதைவினாலுண்டாகும் சோகை. இது "செவ்வணுச் சிதைவுச் சோகை" [Haemolytic anaemia] எனப்படும். இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

(1) குருதிப் பெருக்குச்சோகை :

குருதிப்பெருக்கு அல்லது குருதி ஒழுக்கின் மூலம் குருதி விரைவில் வெளியேறி விடுவதால், இந்நோய் மிகவும் கடுமையான வகையாகும். இந்நோயைப் போக்க உடனடியாகக் குருதி ஊட்டம் [Transfusion] அளித்தல்வேண்டும். மூக்கின் வழியாக குருதி கசிதல், உணவுப் பாதை, கருப்பை முதலியவற்றிலிருந்து குருதி கசிதல், மூலநோய் [Haemorrhoids] முதலிய பல நிலைகளில் இந்நோய் உண்டாகலாம்.

(2) செவ்வணுச் சிதைவுச்சோகை :

இந்நோய் செவ்வணுக்களின் சிதைவிலுண்டாவது என்று முன்பே குறிப்பிடப்பட்டது. இந்நோய் தலைமுறை தலைமுறையாக வருவதுண்டு செவ்வணுக்களின் வடிவமாற்றத்தைக் கொண்டு, மூன்று சீரிய வகைகளாக இந்நோயைப் பிரிக்கலாம். அவை

யாவன : (அ) கோளவணுச் சோகை; (ஆ) முட்டை வடிவ அணுச்சோகை; (இ) பிறையணுச் சோகை.

(அ) கோளவணுச் சோகை: (Spherocytic anaemia) இந்நோய் உள்ளவர்களுடைய குருதியில் மிக மெல்லிய செவ்வணுக்கள் நிறைந்திருக்கும். இதிலிருந்து இந்நோயை அறியலாம். இவ்வகை அணுக்கள் விரைவில் நைந்து, சிதைந்துவிடுகின்றன. இதனால் அவற்றிலுள்ள செவ்வணணக் காரணி [Haeomglobin] வீணாகிச் சோகை உண்டாகிறது.

இந்நோய் உள்ளவர்களின் மண்ணீரல் பெருத்துக் காணப்படும். பித்த நீர்க்கற்கள் [Gallstiones] தோன்றி பித்த நாளத்தை [Bile duct] அடைத்துக் கொள்வதால், இந்நோயுள்ளவர்களுக்கு மஞ்சட் காமாலை [Jaundice] என்னும் நோய் உண்டாகி, தோல், கண் முதலிய உறுப்புக்கள் மஞ்சள் வண்ணம் பெறும். இந்நோயுள்ளவர்களின் மண்ணீரல் நீக்கிவிட்டால், அவர்கள் அதிகநாள்கள் உயிர் வாழமுடியும். மண்ணீரல் இல்லாமல் ஏழு ஆண்டுகளுக்குமேல் உயிர் வாழ முடியாது என்ற நம்பிக்கை, தற்பொழுது பொய்யாக்கப்பட்டுள்ளது. மண்ணீரலை நீக்கிவிட்டால் கூட இந்நோய், நோயாளியின் அடுத்த தலைமுறையினருக்கு ஏற்படலாம்.

(ஆ) முட்டை வடிவ அணுச்சோகை- (Oval-cell type Anoemia): இந்நோய் மிகவும் கடுமையானது. இது நணணிலக் கடல் நாடுகளில் வாழும் மக்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. இந்நோயுள்ளவர்களின் குருதியில் மிகப்பெரிய அளவுடைய செவ்வணுக்கள் நிறைந்து காணப்படும். ஆனால் அவற்றில் தேவையான அளவு செவ்வண்ணக் காரணி இராது இந்நோய் முற்றிவிட்டால் நோயாளியின் உயிரிழப்பைத் தவிர வேறு வழியில்லை. துவக்கக் காலத்தில் இந்நோயை அறிந்தால் நோயின் கடுமையை ஓரளவு குறைக்கலாம். இந்நோய்க்கு முன் குறிப்பிட்ட பண்டுவ முறைகள் அனைத்தும் பயனற்றவையே. இந்நோயையுடைய பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் இந்நோயின் கடுமைக்கு இலக்காகின்றனர்.

(இ) பிறையணுச் சோகை-(Sicklecell Anaemia) : இந் நோய் ஆப்பிரிக்கா, இத்தாலி, போர்த்துக்கல் நாட்டு மக்களிடையே மிகுதியாய்க் காணப்படுகின்றது. இது தலைமுறை தலைமுறையாய் வரும் நோயாகும். மிக்க கடுமையான இந்நோய்க்கும் தற்பொழுதுள்ள பண்டுவ முறைகள் பயனற்றவை. இந்நோயுள்ளவர்களின் குருதிச் செவ்வணுக்களை [RBC] குறைந்த அளவு உயிரியம் [Oxygen] உள்ள சுற்றுப்புறத்தில் வைத்திருந்தால், சில மணி நேரங்களில், செவ்வணுக்கள் பிறை வடிவத்தை அடைகின்றன. இம்முறையின் மூலம், இந்நோயைக் கண்டறியலாம்.

முடிவுரை : குருதிச் சோகை என்னும் நோயைப்பற்றி இக் கட்டுரையில் ஆராய்ந்தோம். குருதிச் சோகையின் அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவரின் அறிவுரையைப் பெற வேண்டும். இந்நோயை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். இல்லையெனில் பெருந் துன்பமாய் முடியும். இரும்புச் சத்துள்ள பொருள்கள், கல்லீரல் போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்வதின்மூலம் இந்நோய் வராமல் தடுக்கலாம். நோய் வந்தபின் அகற்றுவதைவிட, வருமுன் தடுத்தல் சிறந்ததன்றோ!

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம் :	12 உருபா	24 உருபா	24 உருபா.
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ் :	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

(24–ஆம் பக்கத் தொடர்ச்சி)
உலக மலர்ச்சியை உயர்வுபடுத்தும் முதுமையின் மதுகைத் திறத்தை எடுத்துக்கூறி நின்றது.

தன் கல்லறையைத் தானே அமைத்துக்கொள்ளும் பெரு வீரப் பணபினைப் பெற நெறி நல்கியது.

இத்துணையுஞ் செய்து வருங்கால் இது பட்ட அகத்துயரும் புறத்துன்பும், உற்ற பிற இடரும், தாண்டிய பல தடையும், நக்குப் போக்கிய இடுக்கணும் எண்ணிலும் அடங்கா; கருத்தினும் அமையா.

இதற்கெனத் தம் உயிரையும் ஊனையும் கரைத்துக் கூழாக்கிப் பாடுழந்து பெற்றுத் தந்த உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் பல; குடும்பங்கள் பல அவற்றை நாங்கள் "பேரன்புத் தமிழ் நெஞ் சங்கள்" எனவும், 'தென மொழிக் குடும்பங்கள்" எனவுமே அழைக் கின்றோம்.

இங்ஙனமெல்லாம் தாளாற்றி, இத் தமிழக மக்கட்குப் பொருள் தந்து நின்றியங்கும் "தென்மொழி", தனது இப் பதினேழாண்டுக் காலச் செலவில், போதிய மூதுக்குறையும், மூதளித்த முதுமைப் பொலிவும், பழமை மாட்சியும்—(புதுமைப் பாய்ச்சலொடு)—பெற்று விட்டதாகக் கருதுகின்றோம்; கருதி, அகவைப் பழஞ்சீர்மை எய்திய தனித்தமிழ்த் தாளிகை என்ற வகையில்—தொன்மை அன்பர்கட்கு ஆற்றுமை தணிவிக்கும் தண்மை நினைவூட்டாகவும், இடை வந் தோர்க்குத் தம் வரவுக்கு முந்திய செய்திக் காட்டாகவும்; புத்துறு வார்க்குத் தொடக்கம் அறிந்து, தோற்றந்தெளிய ஒரு வாய்ப்பாக வும் அமையுமாறு — தொடக்கக் காலத் 'தென்மொழி' இதழ்களி லிருந்து சிலபலவற்றை, இக்காலச் சூழலுக்கும், தமிழ் மொழி இன நாட்டு நிலைமைக்கும் பொருத்தமுடையனவாகிய பாடலும் கட்டுரை யும் ஆசிரியமும் நாடகப் பகுதியும போன்றவற்றை, மீண்டும் வெளி யிட்டுச் சுவையூட்டி உணர்வேற்ற விழைகின்றோம்.

இந்தப் பகுதியினை, 'தென்மொழி' அன்பர்கள் வரவேற்று, "புதுமையிலே முது நினைவு பாய்ந்தெழுந்தாற் போல" நற்பயன் மாந்தி, மெய்ப்பயன் கொள்ளுவார்கள் என நம்புகின்றோம், நம்பித் தொடங்குகின்றோம்.

இவ் வகையில், முதலாவதாக; ஏடகங் கொள்ளுவது, தி - பி. 1991 மீனத் திங்கள் 2 (15-3-60) ஆம் பக்கல் வெளிப்போந்த (அப், போதைய) இயல் க—இசை கரு 'தென்மொழி' இதழில் "கோடை" என்ற தலைப்பில் தமிழன்பன் என்பாரால் இயற்றப்பட்ட பாடல் ஒன்று.

அப் பாடற் கருத்துதான் இக்கால், நந்தமிழ் நாட்டினைச் சூழப் பிணித்துள்ள நிலைமைப்பாடுகளை, எத்துணைப் பொருத்தமாக வண்ணித்துக் காட்டுகின்றது பாருங்கள்! விழுத்தமிழ் முழுத்தொண்டும். பொதுநலப் பீடும் சான்ற வாய்மை நெஞ்சங்கள் தம் செவிகளில் கூகையின் முழக்குப் புகுந்தது, கோடையின் ஆட்சி வருகை அறிவிப்ப, அவை குன்றிக் குலையப் பெறுவதை நாம் எல்லாரும் உணர்கின்றோம் அல்லமோ?

இவ்வாறு, தமிழகத்தார் நெஞ்சங்கள் குன்றிக் குன்றிக் குலையக் குலையச் சென்று சென்று, நீங்கா அடிமைப் பாழுக்குள் உய்க்கும் வகையில், இக்கோடை ஆட்சி இங்கு நிலைபூன்றி விடுமோ? அன்றி; அதனையடுத்து, காரின் மலர்ச்சியும் கூதிரின் குளிர்ச்சியும், அவை வழி நம் சாவின் வீழ்ச்சியும் அமைய உள்ளதாங்கொல்? இவை யாவும், எந்தமிழர் அறிவெழுச்சியையும் உள்ளக் கிளர்ச்சியையுமே பொறுத்தன. என்வே நாம் கூற உள்ளது, இயல்வது! பாடல் இதோ—

கோடை.

தமிழன்பன்.

பச்சை பறந்தெழில் பட்டிட எங்கணும்
பாலை மருவியதால்—துயர்
வேலை நெருங்கியதால்—மரம்

உச்சி முதலடி வேரின் நுனிவரை
வாடி உயர்ந்ததுவே—நலம்
நாடிப் புலம்பியதே!

செய்தித்தாள் - அரசியல்.

0 ஒரு செய்தித்தாளில் செய்தி வந்தவுடன் அதை உறுதிப் படுத்தும் சடங்கிற்காக நாம் காத்திருக்க வேண்டியது இன்றியமையாதது. —வால்டேர்.

நாம் மட்டுமல்லர் செய்தித் தாள்காரர்களும்தாம்.

0 ஒரு செய்தித்தாளின் மிகமிக உண்மையான பகுதி அதில் வரும் விளம்பரங்கள் தாம். -சாபர்சன்.

துணிந்து போடக்கூடியவை அவைதாமே!

0 ஓரிலக்க வேட்டெஃக்க் குண்டுகளைவிட மூன்று செய்தித் தாள்களுக்காகவே அஞ்சுகிறேன். -நெப்போலியன்.

செய்தித் தாள்களை அடக்கத்தெரியாத அரசியல்காரர்.

வாடுஞ் சருகுகள் கூடி யரற்றின
வாழ்வின் முடிவினிலே!—கொலை
ஊழின் பிடியினிலே!—காற்று
தேடி யலைந்திட மெல்லிய பூங்கொடி
தேம்பி அழுததுகாண்!—மனங்
கூம்பி விழுந்ததுகாண்!

முட்கள் பரவின; மூடின புல்வெளி!
மூங்கில் எரிந்ததுவே!—சோலை
ஏங்கிக் கரிந்ததுவே!—வானில்
புட்கள் பறந்தில; கூட்டிலே குஞ்சுடன்
போக்கற்று வாடினவே!—வெம்மை
தாக்குற்றுப் பாடிலவே!

வாடை சுழன்றிட ஆறுகள் வற்றின!
வான்மலை ஏரற்றதே!—இளம்
மான்விழி சோர்வுற்றதே!—எங்கும்
கோடையின் ஆட்சியைக் கூகை முழக்கிடக்
குன்றிக் குலைத்ததடா!—நெஞ்சம்
குன்றிக் குலைந்ததடா!

0 அரசியல் கயவர்களின் கடைசிப் புகலிடம்.

-பர். சான்சன்.

அல்லது கடைசிப் புகழிடம்.

0 எல்லா அரசியல் கட்சிகளும் தம் பொய்களை ஏற்றுக்கொள்ளும் முடிவில் அழிந்து போகின்றன.

- பர். அருபுத்துநாட்டு.

உசாவல் குழு செயற்படுகின்றது.

0 தன் தேவைகளைப் "பொதுச் செயல்கள்" என்ற பெயரில் நடத்துவது தான் அரசியல். -அனூன்.

அரசியல் அலகாபாத்து அன்று.

0 செல்வர்களிடமிருந்து செல்வத்தையும், ஏழைகளிடமிருந்து ஒப்போலையையும் பெற்றுவிட்டுத் தன்னை காத்துக்கொள்ளும் சாக்குப்போக்குக் கலைதான் அரசியல். - அனூன்.

காத்துக்கொள்ள முடியாத நிலைதான் நெருக்கடி.

0 ஓர் இடரிலிருந்து மற்றோர் இடரிற்குக் கொண்டு செல்வதைத்தான் முன்னேற்றம் என்று அழைக்கிறோம்.

-ஏவுலாக்கு எல்லிசு.

முன்னேற்றப் பாதைக்கு வழியமைப்போம்!

0 நம்மால் அமைக்கப்பெறும் சட்டங்கள் அரசியலமைப்பில் தான் அடங்கும். உண்மை வரலாறு அறிவாற்றலால் அமைக்கப்பெறுவது. அதற்குப் பெரிய நெஞ்சமும் வலிமையுள்ள கைகளும் உள்ளன.

-சவகர்லால் நேரு.

தம் வழிமுறைக்கு அறிவுரை.

திருத்திப் படிக்க.

சென்ற இதழின் அட்டை மூன்றும் பக்கத்தில் வெளிவந்துள்ள 'ஒரு மனம்' என்ற பாடலில், 'இந்த மனத்தைத்தான் ....' எனத் தொடங்கும் பன்னிரண்டு வரிகளைப் பாட்டின் இறுதிப் பகுதியாக வைத்துப்படித்துக்கொள்க.

மீன், தவளை இனங்களின் தாய்மை நலம்.

பச்சைக் கிளி தன் பசுங்கிளிக் குஞ்சு பறந்து செல்லும் காலம் வரை இரை தேடி அதற்கீந்து காத்தலும், ஓர் ஆன் (பசு) தன் புனிற்றிளங் கன்றைக் கூவியழைத்து, மடி சுரத்தலும், தாய் தந்தையர் தம் மக்களைப் பேணிப புரத்தலும், கண்கூடு. இத்தகைய தாய்மைப் பண்பு மேனிலை உயிரிகளிடம் மிகுந்தும், கீழ்நிலை உயிரிகளிடம் குறைந்தும் காணப்படுகின்றது. இஃது இல்லெனின், புதிய இளைய உயிரிகள் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் தோற்று அழிந்துவிடும். இந்நிலை வாயாமலிருக்கவே தாய்மைப் பண்பு துணை செய்கின்றது. தாய்மைப் பண்பிலலாத உயிரே உலகில் இல்லை. செடி, கொடி, மரங்களான நிலைத்திணை உயிரிகளிடம்கூட இப்பண்பு உள்ளது. ஒரு வித்தினுள் பொதிந்து கிடக்கின்ற கரு, தக்க சூழ் நிலையில் முளைக்கும்போழ்து, அவ்வித்தினுள்ளிருக்கும் உணவையே உட்கொண்டு வளர்கின்றது. அக்கரு நிலத்தினின்றும் கதிரினின்றும் உணவுப்பொருளை எடுத்துக்கொண்டு வளர்வதற்குவேண்டிய ஆற்றல் வரும்வரை, வித்தினுள்ளிருக்கும் உணவுப் பொருளையே பயன்படுத்துகின்றது. இது வித்தின் தாய்மைப் பண்பு! இவ்வாறே கீழ்நிலை உயிரிகளான மீனினங்களும், தவளையினங்களும் தாய்மைப் பண்பைப் பெற்றிருக்கின்றன.

மீன்களும, தவளைகளும் தண்ணீரில் முட்டையிடுபவை. அம் முட்டைகள் தண்ணீரில் இடப்படுவதால், அவற்றிற்குக்கேடுகள் சூழ வாய்ப்பிருக்கின்றது. இவ்வழிவுகளிலும் தப்பி, அவ்வினம் வளரவே ஏராளமான முட்டைகள் இடப்படுகின்றன. ஆயினும் சில இனங்கள் குறைவான எண்ணிக்கையுள்ள முட்டைகளையே இட்டு, அவற்றைப் பேணிப் புரக்கின்றன பெரும்பாலும் ஆண் மீன்களே முட்டைகளைக் காக்கின்றன,

வெண்ணெய் மீன் (Butter Fish) என்ற மீன் அதன் உடலால் முட்டைகளைச் சூழ்ந்து கொள்ளுகின்றது. ஆண் மீனும், பெண் மீனும் மாற்றி மாற்றி இங்ஙனம் முட்டைகளைக் காக்கின்றன ; நத்தை போன்ற மெல்லுடலிகள் (Molluscs) தொளைத்த தொளைகளில் அம்முட்டைகளுக்கு எவ்வகை ஊறும் நேராமல் கொண்டு சென்று வைக்கின்றன. பிரிட்டிசு பிளெனிசு (British Blennies) என்ற மீன், முட்டைகளைப் பாறையின் மேலடுக்கில் வைத்துவிடு

கின்றது. அவை மீன் குஞ்சாக மாறும் வரை ஆண் மீன்தான் காவல் காக்கின்றது; கோபியசு (Gobius) என்ற ஆண் மீனின் வெறுமையான கிளிஞ்சிலில் முட்டைகளை வைத்துக் காக்கின்றது. சாலமன் (Salmon) என்ற மீனின் வகையில், பெண்மீன் ஆற்று நீரில் மணலடியில் குழி பறித்து முட்டையிட்டு மீண்டும் அதை மூடிவிடுகின்றது. பின்னர் ஆண் மீனும், பெண் மீனும் அவற்றைப்பற்றிப் பொருட்படுத்துவதில்லை. ஏமியா (Amia) என்ற இனத்தைச் சார்ந்த பெண் மீன், நீர் நிலைத் திணைகளால் (Water-vegetation) கூடுகட்டி அவற்றில் முஞ்டையிட, ஆண்மீன் அவை குஞ்சாகும் வரை காத்து வருகின்றது. ஆண் இசுட்டிக்கிள்பேக்கு (Male Steckle back) மீன் தன்னுடைய சிறு நீரகங்களிலிருந்து சுரந்த திரிகளில், பெண் மீன் இட்ட முட்டைகளடங்கிய கூட்டைச் சுமந்து செல்கின்றது. ஆண் கடற் குதிரை (Male sea horse) மீன், தன்னுடைய வயிற்றுப் புறத்தில ஒரு வளர்ப்புப் பையைப் பெற்றுள்ளது; அப்பையில் பெண் மீன் இட்ட முட்டைகளைக் காப்புடன் சுமந்து செல்கின்றது.

தவளையினத்தில் தெசுமாகினெத்தசு (Desmognathus), ஆம்ஃபியுமா (Amphiuma) என்ற இரண்டு வகையைச் சார்ந்த தவளைகளும், நிலத்தில் குழி பறித்து முட்டையிட்டு இரவு பகல் காத்து வரும் இயல்பு வாய்ந்தவை. இசுதையோபிசு (Ichtyophis) எனும் வகையைச் சார்ந்த தவளை (ஏறத்தாழப்பாம்பு போலத்தோற்றமளிக்கும்) பாம்புகள் அடைகாப்பதுபோல் முட்டைகளை உடலால் சுற்றிக் கொள்கிறது. பிரான்சிலும்; இத்தாலியிலும் 'செவிலித்தேரை' (Midwifetoad) என்ற பெயரைப் பெற்ற அலைட்டசு (Alytes) என்ற தேரை, தன் பின்னங்கால்களில் முட்டைகளைச் சுமந்துகொள்ளும். பைப்பா பைப்பா (Pipa-pipa) என்ற வகைசேர்ந்த தவளையின் எருவாய் (Cluaca) மிக நேராக அமைந்திருப்பதால், முட்டைகளும் ஒவ்வொன்றாக இடப்படும். ஒவ்வொரு முட்டையாகப் பெண் தவளை இடுவதற்கு ஆண் தவளை எருவாயை அமுக்கி அமுக்கித் துணை செய்யும். பின்னர் பெண் தவளை தன் முதுகின்மேல் அம்முட்டைகளைச் சுமந்துகொள்ள, ஆண் தவளை துணை நிற்கும். சில அமெரிக்கத் தவளைகள் (Deadrobates and Pelobates) தலைப்பிரட்டைகளைக் (Tadpoles) கூட முதுகில் சுமந்து செல்கின்றன.

இவ்வாறு மீனினங்களும் தவளையினங்களும் தாய்மைப் பண்பைப்பெற்று விளங்குகின்றன.

செய்குவீர் !

முத்துக் கொழித்ததும் யாங்கள் — கடல்
மீதில மரக்கலம் விட்டதும் யாங்கள் !
சித்துப் பயிலுறவ ரெம்மோர் — பெருஞ்
சீருஞ் சிறப்பொடும் வாழ்ந்தவர் முன்னோர் !
மெத்த இலக்கியங் கண்டோர் என
மேன்மைப் புகழுரை பற்பல கூறி
எத்தித் திரிந்திடு வோரே — இவ்
வேழை இயம்பிடும் நல்லுரை கேட்பீர்.

தாயை அழுதிட வைத்தீர் — அவள்
தண்டமிழ் நாவிற் றுளைபல செய்தீர்
பேயை அரியணை வைத்தீர் — அவள்
பேசும் இழிமொழிக் காடவுஞ் செய்தீர்
காயைக் கனியென்று கொண்டீர் — கருங்
கல்லை மலரென்று நுகரவுஞ் செய்தீர்
ஆயுந் தமிழ்ப்புல வோரை — நகை
யாடி வருகுவீர் ஏதுரை சொலவேன்

புன்மை மொழிபல சொல்வீர் — பல
பொய்மைச் செயல்பல நாளுமே செய்வீர்
மென்மை உளத்தினை விட்டீர் — அறம்
மேவும் பணிகளின் மேன்மை மறந்தீர்;
வன்மைத் திறங்களு மின்றி — நல்
வாழ்வுப் பயன்களும் உயர்வது மின்றி
முன்மைத் தமிழரைப் பற்றி — வாய்
முரசறைந் தேசெயல் முற்றுந் துறந்தீர் !

கற்றவ ருஞ்செய லற்றார் — எனிற்
கல்வியில் லாதவர் விளைவெது காண்பார் ?
பெற்றவர் காத்திடாப் பிள்ளை — பிறர்
பேணுவ தால்வளர்ந் தோங்கிட இல்லை !
பற்றுக் குறைந்தது நாட்டில் — தமிழ்
பண்டைத் திறத்தினில் சிதைந்தது முற்றும்
உற்ற புலவரை நாடி — தமிழ்
உய்ந்திடும் வகையினுக் கானவை செய்வீர் !

செந்தமி ழேஉயிர் மூச்சு — அதன்
சிறப்பும் உயர்வுமே நம்பெரும் பேச்சு !
செந்தமி ழேஉயர் வாழ்வு — அது
சிந்தந்திடில் நாமெல் லவர்க்குமே தாழ்வு ;
மூந்தை வள்ம்பல கூறி — வெறும்
மூங்கைச் செயல்பல கூறிடுவோரே,
எந்தமிழ் காக்கமுன் நிற்பீர் ! — அதற்
கேற்ற பணிகளைச் செய்குவீர் இன்றே !

செந்தமிழ்ச் சின்னச்சாமி.

செந்தமிழ் மறவன் சின்னச் சாமி
வெந்தழல் புகுந்து வெந்தனன்; என்றொரு

செய்திவந் தெம்செவி சேர்ந்ததும் உள்ளம்
வெய்துயிர்ப் புண்டது! வெயர்த்தது உடலம் !

தமிழ்க்குயிர் துறந்த தமிழ்மகன், தன்றாய்
அமிழ்தெனும் மனைவி மக்கட் கெல்லாம்

வைத்துச் சென்ற வைப்பெலாம் புகழே!
பொய்த்துயிர் வாழும் போலியர் தமக்குச்

சின்னச் சாமியின் ஈகச் சிறப்பும்
மன்னும் புகழும் மறையா திலங்குக !

தமிழ்க்குயிர் செகுக்கும் தகைமை யாளர்
தமக்கொரு நற்சொல் : தமிழ்க்கென உயிரை

ஈதல் என்றால், எரிநெய் ஊற்றிச்
சாதல் இல்லை! சாகுநாள் வரையில்

செந்தமிழ்க் குற்ற தீமைகள் களைதலும்
வெந்துயர் தருவார் தம்மை வீழ்த்தலும்

ஆகுமே அன்றித்தாம் அழிதல் அன்று:
சாகுவர் தம்மால் தமிழ்ப்படை சாகும்!

பகைப்புலன் அறுக்கப் பதைப்பார்
வகைப்பட முயல்வதே வழியென் றறிமே!

மறைவு.

தென்மொழி யின்மே னுள் எழுத் தர்திரு.
அன்பழ கன்தன் அருமைத் தம்பி
தங்க மணியின் பிரிவை, மேழத்
திங்கள் ஐந்தில், தாங்கு மனத்தான்
உருபா பத்தினை நினைவிற் களித்தே
உருகுமெங் கண்ணீர் பெருகுவித் தனனே !

நமக்கு வந்த மடல்கள்.

ஐயா, தென்மொழி சுவடி 13. — ஓலை 3 காணப்பெற்றேன். அய்யா அவர்களின் கருத்தாழமிக்க எழுச்சியூட்டும் ஆசிரிய உரை இவ்விதழில் இடம் பெறுமையின் வெறுமையை நன்குணர முடிகிறது. அதை ஓரளவு ஈடுசெய்யும் வகையில் 17 ஆண்டுகட்கு முன்பு அய்யா வெளியிட்ட 'தமிழ்க் குலமே' என்ற பாடல் இவ்விதழின் முகப்பை அணி செய்கிறது. இந்த எழுச்சிமிகு பாடல் இந்நாளில் நிலைகுலைந்து போயுள்ள மெய்த் தமிழன்பர்கட்கு வழிகாட்டும் ஒளி விளக்காய்த் திகழ்கிறது. எனினும் தமிழ்க் குலத்தவர் 17 ஆண்டு கட்கு முன்பு இருந்த அதே சூழலில் — அய்யா அவர்களின் அதே பாடல் இன்றைக்கும் தேவைப்படுகின்ற — பொருந்துகின்ற நிலையில்தான் உள்ளனர் என்பதை எண்ணிப்பார்த்தால், பெருமைப்பட முடியவில்லை. ஏக்கப் பெருமூச்சு தான் வருகிறது.

போற்றுதலுக்குரிய தேவநேயப் பாவாணரின், 'குலப்பட்ட வரலாறு' இற்றைத் தமிழ்க் குமுகாயத்தில் சாதி சமயத்தையொட்டி பட்டப் பெயர்கள் நிலவுவதற்கு அடிப்படையாக, முறையாக இருந்த அந்தக்கால வரலாற்றையும், ஆரியர் வருகைக்கு பின்பு வேறுவகையில் மாற்றி வழங்கப்பட்டு வருவதையும் தெள்ளிதின் விளக்குகிறது. இன்றைய நாளில் குலப்பட்டப்பெயர் வழங்குவதால் வரும் இழிவினை பாவாணர் கட்டுரையின் இறுதியில் அமைந்துள்ளமையும் — இத்தகு பழக்கம் குமுகாய முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாய் நிற்பதையும் சுட்டிக் காட்டியுள்ளமை பாராட்டிற்குரிய ஒன்றாகக் கருதுகிறேன்.

'தோழியின் அன்பு', 'ஊர் அறியும் முன்' ஆகிய இரு பாடல்களிலும் உள்ள இனிமையும், எளிமையும், கருத்தாழமும் எம்மைப் பெரிதும் கவர்ந்தன.

'உலகியல் நூறு' தமிழ்த்தாயின் மணிமுடிக்குப்புகழ் சேர்க்கும் மற்றுமொரு அணிகலனாகும். தமிழ்மொழி இந்நிலவுலகில் வழங்கும் நாள் வரையில் 'உலகியல் நூறு' நின்று புகழுடன் விளங்கப் போவது உறுதி. இதற்கு ஆங்கில மொழியாக்கம் தரும் திரு. முத்துக்குமரனுக்குத் தமிழ் பேசும் நல்லுலகம் கடப்பாடுடையது.

தனித் தமிழ் பற்றையும், தமிழ் இனப் பற்றையும், தமிழ் நாட்டுப் பற்றையும் — தன் உயிர் கொள்கைகளாக கொண்டுள்ள என் போன்ற அன்பர்கட்காகத் தொடர்ந்து 'தென்மொழி' வெளிவர ஆவன செய்யும்படி வேண்டுகிறேன்.

அ. கி. கலியபெருமாள், அயனுவரம்.

என்றோ ஒருநாள் ஏந்தலும் வருவான்;

அன்றிலை மணப்பான்; அணைப்பான்;—என்றே

ஏங்கிட நாட்களை எண்ணினுள்!

எண்ணிக் கொண்டிருந்த ஐயையின்

வாழ்க்கை நிலையென்ன?

விரைவில் தொடருகிறது.

2-ஆம் பகுதி.

சிறையில் பிறந்த 'ஐயை'

சிறையிலேயே மீண்டும் வளருகிருள்.

விடுதலையானவுடன் வெளி வருவாள்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.